
www.tamilarangam.net

# தாயினத்தை நேசித்த நெஞ்சங்கள்



கந்தையா பேரின்பநாதன்
(நாதன் - அரியாலை)
மலர்வு : 10.10.1964
(அனைத்துலக நிதிப் பொறுப்பாளர்)

தமிழீழத்தை நேசித்த காளைகள்
நெஞ்சினில் பாய்ந்ததேன் குண்டுகள்?
எண்ணம் செயல் விழிப்பும்
தானம் தரும ஞானமும்
தாயக விடியலின் வீரியமாய்
உயிராய் உணர்வாய் நிமிரான
தங்கமகன் நாதனின் புகழுடல்
புகழிடம் தன்னில் பூப்படுக்கையானதோ?
தமிழர் நெஞ்சமெல்லாம் நிறைந்த
தங்கநிகர் குணத்தினன் அங்கமெல்லாம்
தகிக்க அமைதி கொண்டதேன்...?
திரைகடல் கடந்துவந்தத் தீந்தமிழா
பனிதிரை மண்ணில் பாடை கொண்டாயோ?
மக்கள் நெஞ்சில் நிறைந்த நாதனே!
நிதியினை சேகரிப்பதில் சோர்வற்றவனே
நிதிப்பொறுப்பேற்ற கொடைத்திலகமான
வீரனின் நெஞ்சினில் பாய்ந்தது குண்டா?

## வரலாற்றில் நிலைத்தது நாதனின்
## பேரின்பநாதனின் கஜனின் தியாகம்!



கந்தையா கஜேந்திரன்
(கஜன் - கோண்டாவில்)
மலர்வு : 17.04.1966
(ஈழமுரசு பத்திரிகை ஆசிரியர்)

ஐரோப்பிய நாடெங்கும் முரசொன்று
ஐக்கியமாய் முழங்கியது ஈழமுரசு
ஆசிரியர் பணியேற்ற கஜனே...!
நிஜமாக எம்மைவிட்டுப் போய்விட்டாயோ?
இனத்தின் விடிவை இதயத்தில் பூஜித்தவனே
இருந்தாலும் இறந்தாலும் தமிழீழம்தான்
மூச்சென்ற ஈழமுரசு கஜேந்திரனை
பிணந்தின்னும் பேய்கள் கொத்தியதேன்?
சத்தியத்தின் நித்திய தரிசனத்தை
உத்தமமாய் நேசித்த உத்தமனின்
அவலத்தை என்பேனாவால் எழுதமுடியவில்லை!
தாயினத்தை நேசித்த நெஞ்சங்களை...
ஐயகோ... ஐயகோ என்நெஞ்சு தாங்கவில்லை
புகழிடவாழ் தமிழ் நெஞ்சமெல்லாம்...
நெக்குருகி நிற்பதுகாண் கஜேந்திரனே!

கவிஞர் கி.கிறிஸ்ரியன் - 26.10.1996